பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 19 புதன்கிழமை (04-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 274

# மணலாறில் தொடர்ந்து 3 நாட்களாக கடும் சமர்

## காட்டு எல்லைக்குள் பிரவேசிக்க ஸ்ரீலங்கா படையினர் பிரயத்தனம்

யாழ்ப்பாணம், செப். 4

மணலாறுப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உக்கிரமான சண்டை நடைபெற்று வருகிறது. கடந்த மூன்று நாட்களாக நடந்து வரும் இந்த மோதல்களில் இரு தரப்பாரும் கடுமையாக போராடி வருகிறார்கள்.

விமானப் படையின் பயங்கரத் தாக்குதல் துணையோடு, காட்டு எல்லைக்குள் பிரவேசிக்கும் இலக்குடன் ஸ்ரீலங்காப் படை நித்தியக் குளத்தில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை கடந்த முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்தது.

எனினும புலிகளும் சளைக்காது எதிர்த்தாக்குதல் நடத்தி வருவதாக அங்கிருந்து நேற்றிரவு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

மணலாறுப் பிரதேசத்தில் உள்ள சகல முகாம்களிலும் இருந்து வெளியேறிய இராணுவம், நித்தியக்குளப் பகுதியில் ஞாயிறன்று பெரும் தாக்குதலைத் தொடங்கியது.

பெரும் எடுப்பில் ஆரம்பிக்கப்பட்ட இத் தாக்குதலுக்கு (3 ஆம் பக்கம் பார்க்க)

## அரச தரப்பு எம்.பிக்கள் தனியாகப் பிரேரணை!

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு விசுவாசம் தெரிவிக்கும் ஐ. தே. கவின் 116 எம். பிக்கள் நேற்று பிரதமர் டி. பி. விஜேதுங்க தலைமையில் சபாநாயகரைச் சந்தித்தனர்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் சபாநாயகர் அறையில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

ஜனாதிபதி மீது நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையை பிரதமர் சபாநாயகரிடம் கையளித்தார்.

ஜனாதிபதி மீது கொண்டு வரப்பட்டுள்ள அரசியல் குற்றப் பிரேரணையை நிராகரிக்கும்படி கோரும் தீர்மானம் ஒன்றையும் பிரதமர் சபாநாயகரிடம் அப்போது சமர்ப்பித்தார். [உ-எ]

## சபாநாயகரின் தீர்ப்பு இன்று!

கொழும்பு, செப். 4

ஜனாதிபதி பிரேமதாஸா மீது கொண்டு வரப்பட்டுள்ள அரசியல் குற்றப் பிரேரணை தொடர்பான தனது தீர்ப்பை இன்று (புதன்) வழங்குவதாக சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது நேற்றுத் தெரிவித்தார்.

சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றுக்கொண்ட பின்னர் தீர்ப்பு வழங்கப்படும் என்றும் சபாநாயகர் குறிப்பிட்டார்.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளர்கள் குழு எம். பிக்களும், எதிரணி எம். பிக்களும் சேர்ந்து அரைவாசிக்கு மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்தோடு பிரேமாவுக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றை சபாநாயகரிடம் கையளித்துள்ளனர் என்பதும் —

பிரேமா மீது நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை ஒன்றை ஆளும் கட்சி எம். பிக்கள் 116 பேருடன் [அரைவாசிக்கு மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன்] பிரதமர் விஜேயதுங்க நேரில் சென்று சபாநாயகரிடம் நேற்று ஒப்படைத்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கவை.

இரண்டு பிரேரணைகளிலும் அரைவாசிக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கையொப்பமிட்டிருப்பதால் (3 ஆம் பக்கம் பார்க்க)

## நெருக்கடி தொடர்கிறது

கொழும்பு, செப். 4

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் 125 எம்.பிக்களில் 116 பேர் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு ஆதரவு தெரிவித்திருந்த போதிலும் தொடர்ந்து கொழும்பு அரசியல் நெருக்கடியில் குழப்ப நிலை நீடிக்கின்றது.

திரு. பிரேமதாஸாவுக்கு 116 எம்.பிக்கள் ஆதரவு தெரிவித்திருந்தாலும், அவருக்கு எதிராகக் கொடுக்கப்பட்டுள்ள அரசியல் குற்றக் கண்டனப் பிரேரணையில் எந்த வித மாற்றமும் இல்லை என்று திரு. லலித் அத்துலத் முதலி குறிப்பிட்டிருக்கிறார்.

## இரகசிய வாக்கெடுப்பு நடந்தால் வெற்றி நிச்சயம்

### லலித் வெளியிட்ட நம்பிக்கை

கொழும்பு, செப். 4

பிரேமாவுக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இரக்சிய வாக்கெடுப்புக்கு விடப்பட்டால், 70 சதவிதத்திற்கு மேற்பட்ட எம். பிக்கள் ஆதரவு தெரிவிப்பார்கள் என முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்றுத் தெரிவித்தார்.

பிரேமதாஸா தலைமையிலான அரசு பெரும்பான்மையை இழந்து விட்டதாகவும் அவர் செய்தியாளர்களிடம் சொன்னார். (உ-எ)

### ரஞ்சன், லலித் எதிர்த்த போதும்

## புலிகளுக்கு ஆயுதங்கள் பிரேமா வழங்கினாராம்!

கொழும்பு, செப். 4

''இந்தியப் படைகளுக்கு எதிராகப் போராடுவதற்காக, அமைச்சரவையைக் கலந்தாலோசிக்காமலேயே ஜனாதிபதி திரு. பிரேமதாஸா விடுதலைப் புலிகளுக்கு ஆயுத உதவிகளை வழங்கினார்.

அப்போதைய பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்னாவும் நாங்களும் இதனை எதிர்த்தோம். ஆனாலும் அதனை மீறி திரு. பிரேமதாஸா புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கினார்.''

— இவ்வாறு ஜனாதிபதி மீது திரு. லலித் அத்துலத் முதலியும் திரு. காமினி திஸாநாயக்காவும் குற்றம் சுமத்தி இருக்கிறார்கள்.

திரு. பிரேமதாஸாவுக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையில் இந்தக் குற்றச்சாட்டு பற்றிய விவரமும் சேர்க்கப்பட்டிருப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

தனக்கு எதிரான பிரேரணையைக் கொண்டு வந்திருப்பவர்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று திரு. பிரேமதாஸா சுமத்திய குற்றச்சாட்டுப் பற்றி கருத்து வெளியிடுகையிலேயே அவர்கள் இப்படிக் கூறினர். (உ-எ)

### ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதா?

# சர்வசன வாக்கெடுப்பு நடத்த பிரேமா தயார்!

கொழும்பு, செப். 4

நாடாளுமன்றத்துக்கு நிறைவேற்று அதிகாரத்தை வழங்கும் பழைய நாடாளுமன்ற ஜனநாயக முறையை மீண்டும் கொண்டுவர வேண்டுமா என்பது குறித்து மக்களின் முடிவை அறிய சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி பிரேமதாஸா இணக்கம் தெரிவித்திருக்கிறார்.

நேற்று முன்தினம் மாலையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஆளும் கட்சி எம். பிக்களின் கூட்டத்தில் பேசிய போதே அவர் இக் கருத்தை வெளியிட்டார்.

என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தவர்கள் மக்கள். ஆகவே ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டுமா என்பதை அவர்களே தீர்மானிக்க முடியும்.

இதற்காக சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டுமா என்ற விடயத்தை பரிசீலனை செய்ய நான் தயார். (4ஆம் பக்கம் பார்க்க)

## லலித் வரவேற்கிறார்

கொழும்பு, செப். 4

ஜனாதிபதி ஆட்சிமுறை மாற்றப்பட வேண்டுமா என்பது குறித்து சர்வசன வாக்கெடுப்பு நடத்தத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி பிரேமதாஸா அறிவித்திருப்பதை திரு. லலித் அத்துலத் முதலி வரவேற்றிருக்கிறார்.

உடனடியாகச் சர்வசன வாக்கெடுப்பு நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றார் அவர்.

''ஒருவரிடம் குவிந்துள்ள அதிகாரங்களை எடுத்து மீண்டும் நாடாளுமன்றத்திற்கு அளிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகவே ஜனாதிபதி மீதான அரசியல் குற்றப் பிரேரணையைக் கொண்டு வந்தோம். நாம் ஐ. தே. கட்சிக்கு எதிரானவர்கள் அல்லர்''—இப்படி அவர் மேலும் கூறினார்.

## போதியளவு ம. எண்ணை வடபகுதிக்கு அனுப்பப்படும்

### சிறில் ரணதுங்க உறுதி

தட்டுப்பாடு ஏற்படாத வகையில் போதியவு மண் எண்ணெயை வடபகுதிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப் படும் [illegible] அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகருக்கு உறுதியளித்துள்ளார்.

இத்தகவலை கொழும்பிலிருந்து [illegible] அரச அதிபர் நேற்று செயலகத்துக்கு தெரிவித்துள்ளார். (ஒ-5)

## 4 படையினர் உயிரிழப்பு

புதுடில்லி, செப். 4

முல்லைத்தீவு காட்டுப் பகுதியில் நடந்த சண்டையில் ஸ்ரீலங்காப் படையினர் நால்வர் கொல்லப்பட்டனா என்று கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது. (ஒ)

## ஐ. நாவில் சேர்க்க கோரிக்கை

சுதந்திர நாடாக தம்மைப் பிரகடனப்படுத்தி கொண்டுள்ள போல்டிக் குடியரசு நாடுகளை லித்துவேனியா, லத்வியா, எஸ்தோனியா ஆகியவற்றை ஐ. நாவில் உறுப்பு நாடுகளாக சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று பிரிட்டனும், பிரான்ஸும் ஐ. நா. சபைக்கு மனுச் செய்துள்ளன. (ஒ)

## சுனேத்ரா கல்வி அமைச்சர்?

கொழும்பு, ஆக. 4

திரு. லலித் அத்துலத் முதலி அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்ததை அடுத்து புதிய கல்வி அமைச்சரார்க தற்போதைய கல்வி திட்ட அமைச்சர் திருமதி. சுனேத்ரா ரணசிங்க நியமிக்கப்படலாம் என்று தெரியவருகிறது.

## கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யக் கோரிக்கை

புதுடில்லி, செப். 4

கச்சதீவு ஸ்ரீலங்காவுக்குக் இடைகக வழிவகுத்த 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை இந்திய அரசு ரத்துச் செய்ய வேண்டும்.

இந்திய ராஜ்ய சபையில் தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

கச்சதீவுக் கடலில் மீன் பிடிக்கும் இந்திய, மீனவர் ஸ்ரீலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளாகி உயிர், ( 3ஆம் பக்கம் பார்க்க)

### ராஜீவ் கொலைச் சம்பவம்:

## பிரபா மீது சதிக் குற்றமும் 'வாரண்ட்' உத்தரவும்!

### இந்திய மத்திய அரசு முடிவு

கொழும்பு, செப். 4

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரன் மீது சதிக் குற்றம் சுமத்தவும் அவர் மீது பிடிவிறாந்து பிறப்பிக்கவும் இந்திய மத்திய அரசு முடிவு செய்திருப்பதாக தமிழக நாளிதழான தினத்தந்தி செய்தி வெளியிட்டிருக்கிறது.

இத்தகவல் கொழும்பு தினகரன் பத்திரிகையில் நேற்று வெளியானது. இலங்கை வானொலியும் தனது காலைச் செய்தியறிக்கையில் இதனைத் தெரிவித்தது

இதேவேளை — கொழும்பு தினகரன் பத்திரிகையில் வெளியான இன்னொரு செய்தியில்—

திருச்சியில் வசிக்கும் திரு. பிரபாகரனின் தந்தை திரு. வேலுப்பிள்ளையை பொலீஸார் விசாரணை செய்தனர் என்றும்—

தனக்கும் திரு. பிரபாகரனுக்கும் எதுவித தொடர்பும் இப்போது இல்லை என்று திரு. வேலுப்பிள்ளை அப்போது சொன்னார் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பன்டெம் (Bantam) கோழி முட்டைகள் விற்பனைக்குண்டு. முட்டை ஒன்றின் விலை ரூ. 20/- தொடர்பு கொள்ளவும்: கி.வீ படப்பிடிப்பாளர்கள் 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [18013]

### விற்பனைக்கு புனலைக்காய்

புனலைக்காயை நீரிலிட்டு நுரை வரும்வரை அவசி அதனுள் துணிகளை ஊறவிட்டுத் துவைத்து அழுக்கைப் போக்கலாம். புனலைக்காய் ½ கிலோ பக்கற் ரூபா 25/- யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில் அண்ணா கோப்பி கடைகளில் கிடைக்கும். மில்க்வைற், யாழ்ப்பாணம்.

(சி/0462)

### பாடப் புத்தகம்

O/L. A/L மாணவர்கள் இலகுவில் ஆங்கிலம் கற்க, கற்பிக்க ஏற்ற நூலாக 'ஈசி இங்கிலிஷ்' (Easy English) வெளிவந்துள்ளது. 1 ஆம், 5 ஆம் பகுதிகள் தமிழ்மொழி பெயர்ப்புடன் புத்தக நிலையங்களில் விற்பனைக்குண்டு. (17999)

### இடமாற்றம்

வேலணையிலும், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலும் இயங்கி வந்த நடனமுருகன் வைத்திய நிலையம் தற்காலிகமாக ஆஸ்பத்திரி வீதி [76] 222 ஆம் இலக்கக் கட்டடத்தில் [சத்திரச் சந்திக்கருகாமையில்] இடமாற்றப்பட்டுள்ளது. வைத்தியர்:- சுந்தையா நவரத்தினம்.

(17684)

### மணமகன் தேவை

யாழ் இந்து சைவ போசன 5' 6'' 31 வயது பட்டதாரி ஆசிரியைக்கு அவுஸ்திரேலியாவிற்கு செல்ல விரும்பும் மணமகன் தேவை. தொழிற்கல்வி பயின்றவர்கள் விரும்பத்தக்கது. Sponser பண்ணிஅனுப்பி வைக்கப்படும். தொடர்பு இல. 348 மே/பா உதயன் யாழ்ப்பாணம். [18014]

### மணமகன் தேவை

26 வயது, 27 வயதுடைய ஆசிரியைகள் இருவருக்கு ஆசிரியர், அரச ஊழியர், கல்வி கற்று தனிததொழில் புரிகின்ற 28-36 வயதுக்குட்பட்ட இந்து மணமக்கள் தேவை. தமிழீழத்தில் கடமை புரிபவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும். தொடர்பு இல. 813, C/o உதயன்.

[4274]

### சோதிடம்

கல்வியில சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் பிரச்சினை எதுவானாலும் உரிய பதில் தரப்படும். ஜாதகம், குறிப்பு எழுதவும். எண் சோதிடம்,, கைரேகை பார்க்கவும், விவாகப்பொருத்தம், வீட்டுக்கு நிலையம் வகுக்கவும் தொடர்பு டாக்டர் த.சிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.

(17992)

### கணக்கியல் கோட்பாடுகள்

A/L மாணவர்களுக்கான அடிப்படை நவீன கோட்பாடுகள் வெளிவந்துவிட்டன. ஆக்கியோன்: N. ராஜன் B. Com விலை 25/- சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (சி/0437)

## வைத்திய சேவை

தலைமுடி உதிர்கின்றதா? தலைமயிர் நரைக்கின்றதா? நரம்புத் தளர்ச்சியா? வாதரோகமா? தேக பருமனா? இரந்திப் பீடையா? மாதவிடாய்க் கோளாறுகளா? கவலை வேண்டாம். நாடுங்கள்! நலமடையுங்கள்!!

டாக்டர் த. சிவானந்தன்
D.A.M., R.A.M P. (Srilanka)

''சிவா வைத்தியசாலை''
384, கோவில் வீதி, நல்லூர். (17993)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு:
10-02 1920

உதிர்வு:
05-08 1991

அமரர்
### ஜோசப் அந்தோனிப்பிள்ளை
(ஓய்வுபெற்ற ஆசிரியர் சில்லாலை)

'சீவியத்தில் என்னை நேசித்தவர்களே'
'மரணத்திலும் என்னை மறவாதீர்கள்'

ஆலமரமென நீயிருந்தாய் அதனால்
காலமெலாம் எமைக் காத்திருப்பாய் என்றிருக்க
காலனவன் கவர்ந்து சென்றானே - இதனால்
பாலைவனமானதே எம்வாழ்வு.

இவரின் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல: 15, சந்தானமாதா-
கோவில் ஒழுங்கை, பாண்டியன்தாழ்வு
யாழ்ப்பாணம். (17984)

மூடிய கொப்பறையில் பனம்சீனி உற்பத்தி 1000 கிலோ / 500 கிலோ சீனி உற்பத்திக்கான இயந்திரப் பொறி அமைப்பதற்கான

## கூறுவிலை கோரல்

மேற்படி தொடர்ச்சியாக இயங்கும் ஓர் பொறியை அமைப்பு செய்து தருவதற்கு இயந்திர உற்பத்திகள் செய்யும் கம்பனிகளிடம் இருந்து கூறுவிலைகளைக் கோருகின்றோம். இவ் இயந்திரத்தின் மாதிரி வடிவமைப்பின் படப் பிரதியை, யாழ். மாவட்ட கூ.அ.உ. ஆணையாளர் (ப.பொ) அவர்களை அணுகிப் பார்வையிடலாம். மேலதிக விபரமும் பெறலாம் எமது பிரதேச வனப் பயன்பாட்டைக் கருத்தில் கொண்டு இத்தொழில்சார் நிறுவனங்களிடம் இருந்து இதற்கான கூறுவிலையை எதிர்பார்க்கின்றேன்.

கி. சிவநேசன்,
பொது முகாமையாளர்,
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச.,
சமாசம்.

[சி-0463]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்: 03 — 03 — 1902

ஆண்டவன் அடியில்: 05 — 08 — 1991

### செல்லையா - சின்னத்தங்கம்
(கொடிகாமம்)

எங்கள் பாசமாக இருந்த ஒளிவிளக்கே - அம்மா
எங்கள் வாழ்வை மேன்மையுறச் செய்த தெய்வமே
ஆண்டுகள் ஆயிரந்தான் சென்றாலும்
உங்கள் அன்பு முகம் என்றும்
எங்கள் நெஞ்சைவிட்டு நீங்காது.

எங்கள் அம்மாவின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு சகல வழிகளிலும் உதவிகள் புரிந்து அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் இன்று 04-09-91 ஆத்ம சாந்திக் கிரியைகளில் உதவிகள் புரிந்து பங்கு பற்றும் அனைவருக்கும் எங்கள் நன்றிகள் உரித்தாகுக.

''கயிலயன்கிரி''
கொடிகாமம். [சி-0305]

மகன், மருமகள்,
மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர்
### மாணிக்கவாசகர் கந்தையா
[ஓய்வு பெற்ற விதானையார்]

மலர்வு: 07 — 03 — 1911
உதிர்வு: 14 — 09 — 1990

திருமதி
### கந்தையா தங்கரத்தினம்

மலர்வு: 02 — 11 — 1915
உதிர்வு: 22 — 07 — 1990

திதி: 04 — 09 — 1991

நினைப்பு சொல், செயல், எல்லாம் நல்லனவாகவே இருத்தல் வேண்டும். என்ற கோட்பாட்டோடு வாழ்ந்த எம் அன்புப் பெற்றோரின் ஆன்மா, சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கைதடி நாவற்குழி, கைதடி. [18000]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



வீர ஜனனம்:
22 12 - 1974

வீர மரணம்:
22 - 07 - 1991

### வீர வேங்கை லோலோ
[தில்லைநாதன் முரளிதரன்]

ஓ ........................ முரளி!
உன் சொந்த நலன்களை விட,
தேச நலன்களை நீ முதன்மைப் படுத்தினாய்,
துப்பாக்கி உன் தோளில் இடம் பிடித்தது
கடலிலிருந்து தரையிறங்கிய பேய்களுடன்,
புல்லாவெளியில் நீ களமாடினாய்,
உன் இழப்பை தேசம் இழந்தது.
ஆனாலும், காலத்தை வென்றவன் - நீ,
உனக்கு- ''மரணம் வாழ்வின் முடிவல்ல.''

அம்மா, அப்பா,
அக்காமார், அண்ணா,
தம்பி, அத்தான்மார்,
மருமகன் திலீபன்.

குரக்கன் புலம்,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
புன்னாலைக்கட்டுவன், [17995]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### யாருக்கு வெற்றி வேண்டும்?

தெற்கில் தொடங்கியுள்ள அரசமைப்பியல் போரின் முடிவு எப்படி அமையும் என்பதை அறிவதில் பலரும் ஆர்வமாக உள்ளனர்.

ஜனாதிபதி பிரேமதாசா மீது குற்றவியல் விசாரணை நடத்தி அவரைப் பதவி நீக்கக் கோரும் பிரேரணை எப்போது விவாதத்துக்கு எடுக்கப்படும், வாக்களிப்பு எப்போது நடைபெறும் என்பதற்கான திகதிகள் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

இம்மாதம் 24 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது அவசர காலச்சட்டத்தை நீடிக்கும் பிரேரணையே அனேகமாக விவாதத்துக்கு எடுக்கப்படும். அனேகமாக அதன் பின்னரே ஜனாதிபதி பிரேமதாசா மீதான பிரேரணை விவாதத்துக்கு வரும் சாத்தியம்உண்டு.

அதற்கிடையில் எதிர்பாராத அரசியல் பூதம்பங்கள், எரிமலைகள், சூறாவளிகள் உருவாகலாம். திடீர் வன்செயல்கள் வெடித்து, இரத்தக்களரி கூட ஏற்படலாம்,

இந்த அரசியல் கொந்தளிப்புத் தணிந்து அடங்கி, நிலையான தன்மை ஏற்படும்வரை தமிழர் பிரச்சினை தெற்கில் மறக்கப்பட்டுவிடும். எனினும் அங்கு கலங்கிப் போயிருக்கும் அரசியல் குட்டை, தெளிந்தால் தான், தமிழர் பிரச்சினை எவ்வாறு அணுகப்படும் என்பது தெரியவரும்.

இந்த அரசியல் போரில் ஜனாதிபதி பிரேமதாசா வென்று விட்டால் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உருப்படியாக ஏதாவது செய்தே ஆகவேண்டும் என்று மனம்மாறக் கூடும். வெறுமனே பேசிக்கொண்டிருக்காமல், செயலில் இறங்கவும் செய்யலாம். தமது பதவிக் காலத்தில் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து ஒரு வரலாற்று நாயகனாக ஆக வேண்டும் என்ற ஆசை அவரின் அடிமனதில் இருப்பதாக அவருடன் நெருங்கியவர்கள் கூறி வந்தனர்.

கடந்த இரண்டரை வருடங்களாக தமிழர் பிரச்சினையை கையாண்டு வந்தவர் என்ற தோரணையில், லாப-நட்டங்கள், நன்மை - தீமைகளை ஐந்தொகைக் கணக்குப் பார்த்து அங்கிருந்து தொடர விரும்பக்கூடும்.

லலித் - காமினி - அனுரா கூட்டு வெற்றி பெற்றுவிட்டால், அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது விருப்பப்படி மீண்டும் ஆரம்பத்திலிருந்தே தமிழர் பிரச்சினையை அணுகத் தொடங்குவார்கள்,

இவர்களில் லலித் இராணுவ நடவடிக்கையைத் தீவிரப்படுத்தி போரில் வெற்றி கண்ட பின்னர் — மேலாதிக்க நிலையை எட்டிய பின்னர் — பேச்சு நடத்தி அரசியல் தீர்வுகாண வேண்டும் என்ற கோட்பாட்டை உடையவர். காமினி திசநாயக்காவோ இந்தியாவின் சொற்படி ஆடும் அளவுக்கு அதன் மீது அதீத பற்றுடையவர். அனுரா சந்தர்ப்பத்திற்கு ஏற்றமாதிரி அரசியல் மெட்டிசைக்க வல்லவர்.

மொத்தத்தில், இரண்டு தரப்பினரையும் தராசில் நிறுத்திப் பார்த்தால், தமிழர் பிரச்சினையைப் பொறுத்த வரையில் பிரேமதாசாவின் பக்கத்திலேயே அதிக எடை நிற்கும் என்று மதிப்பிடலாம்.

இரண்டு தரப்புமே மோதகமும், கொழுக்கட்டையும் போன்றவை என்பது உண்மைதான். இரண்டையும் ஒப்பிடும்போது, எல்லோரும் அடிக்கடி சாப்பிடுவது மோதகம் என்ற சிறப்பு இருப்பது போல, முக்கூட்டை விட பிரேமதாச பரவாயில்லை என்ற நிலை எனக் கூறலாம்.

---

### திலீபன் தட, கள விளையாட்டு

## 10 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 04

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் நடத்தப்படும் தியாகி திலீபன் நினைவு தட கள விழாவில் மாவட்ட மட்டத்திலான போட்டிகளான ஆண்கள், பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி, சைக்கிள் ஓட்டப் போட்டி ஆகியவற்றுக்கான விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 10 ஆம் திகதி என அறிவிக்கப் பட்டுள்ளது.

பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் 10 ஆம் திகதிக்கு முன்னர் அவ்வப்பகுதி வட்டவை விளையாட்டுப் பொறுப்பாளர்களிடம் தங்கள் விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு கோரப்படுகின்றனர்.

மாவட்ட மாட்டத்திலான இப்போட்டிகளில் ஆண்களுக்கான மரதன் ஓட்டம் இம் மாதம் 15 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இருந்தும், பெண்களுக்கான மரதன் ஓட்டம் சுன்னாகம் சந்தியில இருந்தும் ஆரம்பமாகும்.

ஆண்கள் –பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டிகள் இம்மாதம் 16ஆம் திகதி கோண்டாவில் சந்தியில் இருந்தும் வேக நடைப் போட்டி 17 ஆம் திகதி நல்லூர் கந்தன் ஆலய முன்றலில் இருந்தும் ஆரம்பமாகும்.

---

### பிரேரணையை கையாண்டவிதம் குறித்து

## சபாநாயகரை ஸ்ரான்லி குறை கூறுகின்றார்

கொழும்பு, செப். 4

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான பிரேரணையைக் கையாண்ட விதம் குறித்து சபாநாயகர் முகம் மதுவை முன்னாள் சபாநாயகரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான ஸ்ரான்லி திலகரத்னா குறை கூறியுள்ளார்.

சர்ச்சைக்குரிய அரசியல் விடயங்களில் சபாநாயகர் ஒருவர் பிரசாரம் தேடக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரேரணையில் சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கும் 67 பேரில் ஸ்ரான்லி திலகரத்னா மட்டும் கையொப்பம் இடவில்லை. இதனால் அவரை கட்சியில் இருந்து இடைநிறுத்தியுள்ளதாகச் சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது. [இ-3]

## 4 போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 4

மணலாறு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் நேற்று முன்தினம் நடந்த மோதலில் விடுதலைப் புலிகள் போராளிகள் டெனி (செல்வராசா சுதர்சன் — மீசாலை), கவாஸ்கர் (கனகசபை சுமித்திரன்—நீர்வேலி), விஸ்வம் (வீரசிங்கம் சிவராஜ் —கோண்டாவில்) ஆகியோரும்—

கடந்த ஞாயிறன்று நடந்த சண்டையில் வீரவேங்கை குரு (வைத்தியலிங்கம் சசீசுரன்— குப்பிளான்) என்பவரும் வீரமரணமடைந்தனர். (ஓ)

## தொலைக்காட்சி படத் தயாரிப்பாளருக்கு

யாழ்ப்பாணம், செப். 4

இதுவரை காலமும் தொலைக்காட்சிப் படங்கள் தயாரித்தவர்களும், தயாரிப்பு முயற்சியில ஈடுபட்டவர்களும், தயாரிக்க விரும்புபவர்களும் எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நிதர்சனம் அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு பொறுப்பாளரால் கோரப்படுகின்றனர். (இ)

## சேவை நலம் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், செப் 4

சுன்னாகம் அஞ்சலகத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற பிரதம தபால் அதிபர் திரு. இ. திருநாவுக்கரசு மற்றும் உத்தியோகத்தர்கள், பணியாளர்களுககான சேவை நலம் பாராட்டு விழா இம் மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3-00மணிக்கு மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர் திரு. வை. இராசையா வைபவத்துக்குத் தலைமை வகிப்பார். [இ]

## சிறிமாவோவின் சீனப் பயணம் ரத்து

கொழும்பு, செப் 4

எதிர்க்கட்சித் தலைவரும் சுதந்திரக்கட்சித் தலைவருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது சீனப்பயணத்தை ரத்து செய்து விட்டார்.

தென் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ - எ]

### சபாநாயகரின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எதனை ஏற்பது, அது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து சபாநாயகர் இன்று தீர்ப்பு வழங்குவார்.


நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

## அவசரம் அருள்வாய்!

ஆடும் மயிலும் சாடும் வேலும்
அணியாய்க் கொண்ட நல்லூரா!
கூடும் அடியார் பாடும் பாடல்
கூறும்பெருமை நாம் இங்கே
வாடும்படி செய் வன்கண் ணரசு
வல்லமை குன்றி அழிந்திடவே
ஆடும் பசுபதி அறிவார் மகனே!
அன்பரைக் காக்க அவசரம் அருள்வாய்.

வாசுகி சிவராமலிங்கம்


---

## காஷ்மீரில் 30 பொதுமக்கள் படையினரின் சூட்டுக்கு பலி

காஷ்மீரில் ஸ்ரீநகருக்கு அண்மையில் உள்ள ஓரிடத்தில் இந்தியப் பாதுகாப்புப் படையினரால் முப்பது பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து காஷ்மீரில் நேற்று முதல் நான்கு நாள் வேலை நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

இதற்கிடையில்—

காஷ்மீர் எல்லையில் இந்திய - பாகிஸ்தான் படையினரிடையே இடம்பெற்று வந்த மோதல்களைமுடிவுக்கு கொண்டுவருவதற்காக இரு தரப்பினரும் யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு இணங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## தமிழீழ ஆதரவு மாநாட்டுக்கு சென்றோர் வேலூரில் கைது

வேலூரில் தமிழீழத்துக்கு ஆதரவாக நடைபெறவிருந்த மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்த சுமார் 80 பேர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிறு அம் மாநாடு நடைபெறவிருந்தது.

மாநாடு நடைபெறவிருந்த மண்டபத்தை, பொலீஸார் முற்றுகையிட்டு சோதனை நடத்திய பின்னர், மூடி சீல் வைத்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று இந்தியா வானொலி தெரிவித்தது. [இ-எ]

### கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு கலந்துரையாடல் ஒன்று பிராந்திய சுகாதாரப் பணிமனையில் நடைபெற இருக்கிறது. (இ-3)

### மணலாறில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உதவும் விதத்தில் பொம்மர்கள், சீனச்சகடை, அவ்ரோக்கள் மற்றும் ஹெலிக்கொப்டர்கள் மாறி மாறி, இடைவெளி இல்லாமல் பயங்கரமாகத் தாக்குதல் மேற்கொண்டு வருகின்றன.

நித்தியகுளப் பகுதியிலேயே பிரதான சண்டை நடந்தாலும் அதனை அண்டிய பிரதேசங்கள் எல்லாவற்றிலுமே மோதல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. ஷெல் வீச்சும் மிகப் பயங்கரமாக நடத்தப்படுகிறது.

முதலாம் நாள் போரில் விடுதலைப் புலிகள் தரப்பில் 13 போராளிகள் வீரமரணம் அடைந்தனர். பலர் காயமுற்றனர். இராணுவ தரப்பு ஆட்சேதம் பற்றி எதுவும் தெரியவில்லை.

இரண்டாம் மூன்றாம் நாள் மோதல்களில் ஏற்பட்ட ஆட்சேதம் பற்றி இச்செய்தி எழுதப்படும் வரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

மணலாறு மாவட்டத்தில் காட்டுப் பகுதியில் நடக்கும் பெரும் சண்டையுடன்—

அந்த மாவட்டத்தில் எல்லையில் அலம்பில், செம்மலை, கொக்கிளாய், நாயாறு, குமுழமுனை ஆகிய மக்கள் வாழும் பிரதேசங்களிலும் அரச படைகள் கடும் மும்முனைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன,

விமானத் தாக்குதலினால் பல வீடுகள், பாடசாலைகள், தேவாலயங்கள் என்பன சேதமடைந்துள்ளன.

இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் முன்னரும் அகதிகளாக இடம் பெயர்ந்து சென்று, இரண்டு — மூன்று மாதங்களுக்கு முன்னரே மீள வந்து குடியேறினர்.

சுமார் ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் இப்பகுதிகளை விட்டு வெளியேறுமாறு படையினர் ஹெலிக்கொப்டர்கள் மூலம் துண்டுப் பிரசுரங்கள் போட்டிருந்தனர்.

திடீரென முதலாம் திகதி மும்முனைத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. (அ-126)

### கச்சதீவு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உடைமைகளை இழந்து வருவது குறித்து, கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட முறையில் தமிழக எம். பிக்கள் ராஜ்ய சபையில் கண்டனக் குரல எழுப்பினர்.

1974 ஒப்பந்தத்தின் பின்னர் இதுவரை கச்சதீவு பிரச்சினையில் சுமார் 100 மீனவர் வரை உயிரிழந்தனர் என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

சென்ற மாதம் 31 ஆம் திகதி கச்சதீவுக்கு அருகில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படையினர் நடத்திய தாக்குதலில் பல இந்திய மீனவர் காயமடைந்ததும் சபையில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்திய மீனவரைப் பாதுகாக்க கச்சதீவு கடற்பகுதியில் இந்திய கடற்படையினரின் நடவடிக்கைகள் பலப்படுத்தப்படவேண்டும் என்றும் தமிழக எம். பிக்கள் கூட்டாகக் கோரினர். [உ-எ]

### சர்வசன...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நாட்டின் முக்கிய பிரச்சினைகளை பழைய நாடாளுமன்ற ஜனநாயக முறையினால் (வெஸ்ட் மினிஸ்ரர்) ஆட்சி முறையினால் தீர்க்க முடியாது; ஜனாதிபதி முறையில் தான் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

வெஸ்ட்மினிஸ்ரர் முறையின் கீழ் தெரிவு செய்யப்படும் அரசுத் தலைவரின் சிந்தனை, அவரது தேர்தல் தொகுதி பற்றியதாகவே இருக்கும். அது குறித்தே அவர் கூடுதல் கவனம் செலுத்துவார்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினை ஒன்றுதான் தற்போது தீர்த்து வைக்கப்படாமல் உள்ளது.

இந்த நாட்டில் வாழும் 74 சதவீத பௌத்த மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரால்தான் அப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும்.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் கீழ் ஜனாதிபதி ஆட்சி முறையை ஆதரித்தவர்கள் இன்று அதற்கு எதிராகக் குரல் கொடுப்பது ஏனோ? வர்க்க பேதம் காரணமாகத்தான் அவர்கள் இன்று ஜனாதிபதி ஆட்சி முறையை எதிர்க்கிறார்கள்; கட்சி வேறுபாடு காரணமாக அல்ல.

எவரும் உயர் பதவிக்கு வர இப்போது வழி திறந்துவிடப் பட்டிருக்கிறது. என் மீது கொண்டுவரப்பட்டுள்ள அரசியல் குற்றப் பிரேரணைக்கு இடம் கொடுத்தால் அந்த வழி மூடப்பட்டுவிடும்.

நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் 'ரதல்ல' காரர்கள் தான் உயர் பதவியை எட்ட முடியும் என்ற நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது அந்த நடைமுறை மீண்டும் ஏற்பட இடமளிக்கக் கூடாது.

— இப்படி ஜனாதிபதி பிரேமதாஸா மேலும் சொன்னார். [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாசார்யாபிஷேகம்

(குருபட்டமளிப்பு)

நிகழும் பிரசோற்பத்தி ஞூ ஆவணி மீ 19ஆம் திகதி (04 - 09 - 1991) இன்று புதன்கிழமை காலை 9-30 மணி தொடக்கம் 10-50 மணி வரையுள்ள சுபவேளையில்

எனது மகன்

பிரம்மஸ்ரீ சு. கௌரிபால சர்மாவுக்கு

சிவாசார்யாபிஷேகம், வடகோவை பால செல்வ விநாயகராலயத்தில் நடைபெறும்.

தீட்ஷாகுரு: சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரகுருக்கள்,
சாதகர் : சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணியசர்மா,
(உபதபாலதிபர், கீரிமலை)

'சித்தாந்த பானு',
சோ. சுப்பிரமணியக் குருக்கள்,
(பேரனார்)

(18008)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் இரங்கற் திருப்பலி அழைப்பும்

மலர்வு: 07 | 05 | 1969



உதிர்வு: 06 | 08 | 1991

## செல்வி யூடிற்றா சாமினி புஸ்பாகரன்

என்னவள் சாமினி — என்று
நான் இறுமாந்திருக்கையிலே
இறைவர், நீ அவளை
உன்னவள் ஆக்கிக் கொண்ட
விந்தைதான் என்னவோ?
அந்நிய நாட்டில்
பாதி வழியிலே பயணத்தை முடித்து
பாவி என்னைத் தவிக்க வைத்ததேனோ?

இவரது ஆத்ம சாந்திக்காக (05-09-1991) நாளை வியாழக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்,
அன்பு அத்தான் ம. சத்தியவான் றமேஸ்
(யாழ். பல்கலைக் கழக மாணவன்)
மாமா, மாமி, மச்சாள்.

இல: 1
2-ஆம் குறுக்கு வீதி
குருநகர், யாழ்ப்பாணம்.

(C/0466)



# மரண அறிவித்தல்

## திருமதி ரா. சிவபாக்கியம்

திருமதி ராஜரட்ணம் சிவபாக்கியம் 03 - 09 - 91 செவ்வாய்க்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. ராஜரட்ணத்தின் அன்பு மனைவியும், லோகேஸ்வரன் (கனடா), மகேந்திரன் (கனடா), மாலதி (யாழ் பல்கலைக்கழகம் முகாமைத்துவத்துறை 3ம் வருடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இன்பவதியின் மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (04 - 09 - 91) காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் றோட்,
கோப்பாய் தெற்கு.
கோப்பாய்.

தகவல்:
ரா. மாலதி (மகள்)

[17694]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட் லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 4 - 09 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# உற்சவகால நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப். 4

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடைபெற்று வரும் இசை மற்றும் சமய அரங்குகளில் வேல் விமான உற்சவ தினமான இன்று புதன்கிழமை மாலை இடம் பெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:

★ நாவலர் மணிமண்டபத்தில் – சங்கீத வித்துவான் கனகாம்பரி பத்மநாதனின் இசைக்கச்சேரி.

★ கம்பன் கோட்டத்தில் - திரு. ந. வி. மு. நவரத்தினம் குழுவினரின் பாட்டு.

★ ஆதீன குருமூர்த்தி ஆலயத்தில் – திரு. ந. சிவசண்முகமூர்த்தி நிகழ்த்தும் 'கந்தரனுபூதி' கதாப்பிரசங்கம்.

★ மேற்கு வீதி பிள்ளையார் கோவிலில் – கானகதாவாரிதி வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் கம்பராமாயண விரிவுரையில் 'அங்கதன் தூது'. (இ–126·30–5)

# உருவப் பட திரை நீக்கம்

யாழ்ப்பாணம், செப். 4

விவசாயபீட முன்னாள் பீடாதிபதி அமரர் பேராசிரியர் எஸ். கந்தையா, அரச அறிவியல் விரிவுரையாளர் அமரர் திரு. கே. ரஞ்சகுமார் ஆகியோரின் உருவப் பட திரை நீக்க நிகழ்ச்சி இன்று முற்பகல் 10 மணியளவில் யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட பொது அறையில் நடைபெறும்.

துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா, கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் உருவப் படங்களைத் திறந்து வைப்பர். (ஓ)

# 30 நாடுகள் அங்கீகாரம்

மாஸ்கோ, செப். 4

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து தனி நாடாகப் பிரகடனம் செய்திருக்கும் போல்ரிக் குடியரசுகளான லித்துவேனியா, லத்வியா, எஸ்தோனியா ஆகியவற்றை 30 நாடுகள் இதுவரை அங்கீகரித்துள்ளன. (இ-எ)

# நயினையிலிருந்து பாதயாத்திரை

யாழ்ப்பாணம், செப். 4

வருடா வருடம் நல்லூர்த் தேர்த்திருவிழாவை யொட்டி சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாஜத்தினரால் நடத்தப்படும் பஜனைப் பாதயாத்திரை இம் முறையும் நடைபெறவுள்ளது.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்திலிருந்து நாளை காலை ஆரம்பமாகும் பாதயாத்திரை நல்லூர்த் தேர்த் திருவிழா தினத்தன்று நல்லூரை வந்தடையும். (ஒ-5)

# சங்கக்கடையில் திருட்டு

யாழ்ப்பாணம், செப். 4

யாழ். ப. நோ. கூ. சங்கத்தின் கைலாசபிள்ளையார் கோயிலடி கிளை உடைக்கப்பட்டு உணவுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. [இ-3]

# சிறுவர் பூங்கா

பருத்தித்துறை செப். 4

மேஜர் ரஞ்சன் நினைவுச் சிறுவர் பூங்காவும், வடமராட்சி மாவீரர் நடுகல் கோட்டமும் எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 5-00 மணிக்கு பருத்தித்துறையில் திறந்துவைக்கப்படவுள்ளன.

அன்றைய தினம் மாபெரும் [illegible] பருத்தித் துறை பழைய நகரத்திலும் நடைபெறும். (இ - 118)


தென்மராட்சிப் பகுதி மாணவர்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்!

# யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பட்டப் படிப்பு 91/92

கலை முதற் தேர்வு - G. A. Q.

A/L இல் 3 பாடங்கள் சித்தி எய்தியவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

விரிவுரைகள் ஆரம்பம்: 7 - 9 - 1991
சனி பி. ப. 1-00 மணி

குறிப்பு: பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்பு (G. A. Q , B. A.) வகுப்புகளுக்கான விரிவுரைகள் தற்போது நடைபெறுகின்றன. விவரங்களுக்கு:

நிர்வாகி,
கலைமகள் கல்வி நிலையம்,
மண்டுவில் அம்மன் கோவிலடி,
சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.

நிர்வாகி:
உயர் கல்வி நிலையம்,
கொடிகாமம்.

[18007]



யாழ். மாவட்ட மக்களுக்கு!

ஓர் அரிய சந்தர்ப்பம்!

இலங்கை அரசாங்க எழுதுனர் சேவை

யாழ். மாவட்டத்திலுள்ள 500 க்கும் மேற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான

# போட்டிப் பரீட்சை

விரைவில் நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான 2 மாத விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 07 - 09 - 91 மு ப. 10 மணி

பாடநெறி;
1. மொழித் தேர்ச்சி 2. பொதுஉளச் சார்பு

தகைமைகள்:
18—40 வயதிற்கிடைப்பட்ட G. C. E. O/L அல்லது N. C. G. E. பரீட்சையில் 6 பாடங்களில் கணிதம், தமிழ் உட்பட 4பாடங்களில் திறமைச்சித்தி (C) (B)

விண்ணப்ப முடிவு திகதி: 30 - 09 - 91

விண்ணப்பப் படிவங்களையும், விவரத்திரட்டினையும் எம்மிடம் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

★ விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களிலும், விடுமுறை நாட்களிலும்.
★ அச்சடித்த பாடக் குறிப்புகள்.
★ கட்டணம் ரூபா 290/- (முழுப்பயிற்சிக்கும்)

ASTAN INSTITUTE
100/10, STANLEY ROAD — JAFFNA.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

(சி-0439)



# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 03 - 08 - 1926
மறைவு: 14 - 09 - 1990
திதி: 04 - 09 - 1991

## அமரர் S. பாலரட்ணம்

(நீர்ப்பாசன இலாகா)

ஆண்டு ஒன்று சென்றாலும் அழியவில்லை உங்கள் நினைவு.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், மகள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

சிங்கராயர் வீதி,
கல்வியன்காடு.

[18017]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org